www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi9T

தென்காசி மாவட்டம்
காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

19-09-2023

-----

வகுப்பு 9
தமிழ்

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்

பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **15×1=15**

1) அழியா வனப்பு, ஒழியா வனப்பு சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத் தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

2) தமிழ்விடு தூது .......... என்னும் இலக்கியத்தைச் சார்ந்தது
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

3) 'மிசை' என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

4) மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசுமரம் இ) வளம் ஈ) பெரிய

5) பொருத்தமான விடையைத் தேர்க.
அ) நீரின்று அமையாது உலகு - திருவள்ளுவர்
ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்
இ) மாமழை போற்றுதும் - இளங்கோவடிகள்
அ) அ, இ ஆ) ஆ, இ இ) அ, ஆ ஈ) அ, ஆ, இ

6) உலகச் சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படும் நாள் .........
அ) ஜூன் 5 ஆ) மார்ச் 20 இ) அக்டோபர் 5 ஈ) பிப்ரவரி 2

7) சொற்றொடர்களை முறைப்படுத்துக.
அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி
இ) தழுவிப் பிடித்தல் என்கிறது
அ) ஆ-அ-இ ஆ) ஆ-இ-அ இ) இ-ஆ-அ ஈ) இ-அ-ஆ

8) ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச் சொற்கள் ஆ) வட சொற்கள்
இ) உரிச் சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்

9) தீரா இடும்பை தருவது எது?
அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை

10) தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது.
அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு
ஆ) ஊரகத் திறனாய்வுத்தேர்வு
இ) தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகை
ஈ) மூன்றும் சரி

11) 'அவன் திருந்தினான்' எவ்வகைத் தொடர்?
அ) செய்வினைத் தொடர் ஆ) தன்வினைத் தொடர்
இ) வினாத்தொடர் ஈ) பிறவினைத் தொடர்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

'நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே'

12) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ) பெரியபுராணம் ஆ) மணிமேகலை இ) புறநானூறு ஈ) சிலப்பதிகாரம்

13) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) சேக்கிழார் ஆ) குடபுலவியனார்
இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) இளங்கோவடிகள்

14) இலக்கணக் குறிப்பு தருக - நீரும் நிலமும்
அ) பண்புத் தொகை ஆ) எண்ணும்மை
இ) வினைத்தொகை ஈ) உம்மைத்தொகை

15) உண்டி - என்பதன் பொருள் யாது?
அ) உணவு ஆ) நீர் இ) உடம்பு ஈ) உயிர்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4×2=8**
**21ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16) **விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க**
அ) அடுத்த உலகப் போர் என்று உருவாகினால் அது தண்ணீருக்காகத்தான் உருவாகும்.
ஆ) இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் விக்ரம் சாராபாய்

17) உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர் நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

18) ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

19) நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

20) கூட்டுப்புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக.

21) 'மிகுதியான்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5×2=10**

22) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

23) **அடைப்புக்குள் உள்ள சொல்லைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.**
அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ........... (திகழ்)
ஆ) வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் .......... (கலந்துகொள்)

24) **தொடர் தரும் பொருளைக் கூறுக.** கடைப்பிடி - கடைபிடி

25) **கலைச்சொற்கள் தருக.** அ) Tropical Zone ஆ) Launch Vehicle

26) **சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.**
மாட்டை தழுவும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தமாகும்.

27) **தமிழ் எண்களில் எழுதுக.**
அ) உன் வகுப்பு மாணவர் எண்ணிக்கை ..........
ஆ) திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் ..........

28) 'அறைந்தனன்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க. 2×3=6**

29) சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

30) மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?

31) உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



மேலைநாடுகளில் குறிப்பாகத் தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில், காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில் ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு. மேலைநாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துகிறது.

அ) ஸ்பெயின் நாட்டின் தேசிய விளையாட்டு எது?

ஆ) யார் வீரனாகக் கருதப்படுவான்?

இ) வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது எது?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**
**34ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32) காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?

33) உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34) அடிபிறழாமல் எழுதுக.

‘தித்திக்கும்’ எனத் தொடங்கும் தமிழ் விடு தூது பாடல்

**(அல்லது)**

‘அறிவியல் என்னும்’ எனத் தொடங்கும் ஓ, என் சமகாலத் தோழர்களே! பாடல்

## பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க.** **2×3=6**

35) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36) ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (விலங்கு, எழுதி, அகல், கால், அலை)

அ) எண்ணெய் ஊற்றி ............ விளக்கு ஏற்றியவுடன், இடத்தைவிட்டு ........

ஆ) கைப்பொருளைக் கடல் .......... யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி ........ந்தால் கிடைக்குமா?

இ) எழுத்தாணி கொண்டு .........ய தமிழை, ஏவுகணையில் .......... எல்லாக்கோளிலும் ஏற்றுங்கள்.

37) வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5×5=25**

38) அ) ‘தூது அனுப்பத் தமிழே சிறந்தது’ - தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

39) அ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் ‘கால்முளைத்த கதைகள்’ என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

**(அல்லது)**

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



41) **நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க**

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

42) **அ) நான் பாராட்டுப் பெற்ற சூழல்கள்**

அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்தபோது.

ஆ) கட்டுரை ஏடுகளைக் கீழே தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்தபோது

1.
2.
3.
4.
5.

**(அல்லது)**

**மொழிபெயர்க்க**

A nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi

The art of people is a true mirror to their minds - Jawaharlar Nehru

The biggest problem is the lack of love and charity - Mother Teresa

You have to dream before your dreams can come true - A.P.J. Abdul Kalam

Winners don't do different things; they do things differently - Shiv Khera

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க. 3×8=24**

43. அ) ஏறு தழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றித் தொகுத்து எழுதுக.

44) அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

**(அல்லது)**

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45) அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை - நீரின்றி அமையாது உலகு - நீரின் இன்றியமையாமை - நீர் நிலைகள் - நீர்பற்றாக்குறை - நீரைச் சேமித்தல் - முடிவுரை.

**(அல்லது)**

ஆ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சி செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

சிவக்குமார், மு. ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப. வல்லம் - தென்காசி மாவட்டம்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com